27.06.2024

O.S.No.180/2019

வா.சா.1.திரு.முத்துராமலிங்கம் த.பெ.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. எனக்கு படிப்பறிவு கிடையாது, கையெழுத்து மட்டும் போடத்தெரியும். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாக்குமூலத்தினை நான் கூறிய சங்கதிகளின் அடிப்படையில் தான் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் நாராயணபுரத்தில் வசித்து வருகிறேன். தாவா சொத்துக்கும் நான் குடியிருக்கும் பகுதிக்கும் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் கிரையம் வாங்கிய ஒரு ஆண்டுக்கு பின்பு தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என அவர்கள் பிரச்சினை செய்ததால் எனது இடம் எனக்கு வேண்டும் என தாவா தாக்கல் செய்துள்ளேன். தா வா சொத்து காலியிடமாக உள்ளது. நான் தாவா சொத்தினை கிரையம் பெற்று சுமார் 5 ஆண்டுகள் ஆகின்றது. தாவா சொத்தினை நான் அளந்து அத்துமால் செய்து கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான், ஏற்கனவே பிளாட் போட்டிருந்ததால் நான் அளந்து வாங்கவில்லை. நான் சுப்புராமன் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினேன். நான் தாவாசொத்தினை விசாரித்துதான் கிரையம பெற்றேன். தாவாசொத்து சர்வே எண்.169/ 1 மற்றும்சர்வே எண்.169/2 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

2. என்னைப் போன்று வழக்கு தாக்கல் செய்துள்ள மற்ற 12 நபர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்துக்களும் இந்த தாவா சொத்தோடு ஒன்றோடொன்று இணைந்துஅமைந்துள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற போது பிளாட் கற்கள் ஊன்றப்பட்டு இருந்தது, தற்போது அந்த கற்களை பிரதிவாதிகள் பிடுங்கி விட்டனர். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ளவைதான் தாவா சொத்து அமைந்துள்ள சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். **(அந்த புகைப்படங்கள் 3 எண்ணிக்கை பி.வா.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னிடம் காட்டப்படும் முதலாவது புகைப்படத்தில் காணப்படும் கட்டிடம் கோபாலகிருஷ்ண பள்ளி என்றால் சரிதான். தாவா சொத்திற்குள் பிரதிவாதிகள் அனுமதி இல்லாமல் செல்ல முடியாது என்றால் சரியல்ல. நான் அவ்வப்போது சென்று தாவாசொத்தினை சென்று பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். நான் அவ்வப்போது தாவா சொத்தினைசென்று பார்த்து வருவதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும், பிரதிவாதிகள் அனுமதி இல்லாமல் தாவா சொத்திற்குள் செல்ல முடியாது என்றாலும் சரியல்ல.

3. தாவா சொத்தினை சுற்றிலும் முள்கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளதா என்றால் நான் கிரையம் வாங்கிய போது கம்பிவேலி எதுவும் அமைக்கப்படவில்லை, ஆனால் தாவா சொத்து தொடர்பாக விவகாரம் ஏற்பட்ட பின்பு கம்பி வேலி அமைத்துவிட்டார்கள். தாவா சொத்து அந்த கம்பிவேலிக்குள்தான் தற்போது உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். தாவா சொத்தில் நான் எப்போதும் கம்பிவேலி அமைத்து கற்கள்

ஊன்றவில்லை என்றால் சரிதான், ஆனால் நாங்கள் கற்கள் ஊன்றியிருந்தோம், அதை பிடுங்கி விட்டார்கள். தாவா சொத்தில் எந்த காலத்திலும் நாங்கள் ஊன்றி முள்வேலி அமைத்தது கிடையாது என்றாலும், ஆரம்பத்தில் இருநது தாவா சொத்து காலியிடமாக பள்ளி மைதானமாக இருந்தது என்றாலும் சரியல்ல. தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் கிரைய நடவடிக்கைகளில் எனது மகன் ஈடுபட்டதால் சர்வே எண் எனக்கு தெரியாது. கோபாலகிருஷ்ண பள்ளி சுமார் 50 ஆண்டுகள் பழமையான பள்ளி என்றால் சரிதான்.

4. தாவா சொத்து உள்பட சர்வே எண்.169/1 மற்றும் ச ர்வே எண்.169/2ல் கட்டுப்பட்ட சொத்துக்களை சுற்றிலும் கம்பிவேலி அமைத்து சுமார் 10 ஆண்டுகள் இருககுமா என்றால் சரியல்ல, சுமார் 4 ஆண்டுகள் இருககும். மேற்படி சொத்தில் கம்பிவேலி அமைத்து 10 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் என்றாலும அந்த சங்கதியை தெரிந்துகொண்டு உண்மைக்கு மாறாக நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கு அருகே தற்போது கேட் எதுவும் இல்லை. தாவா சொத்து முள்கம்பிவேலி அமைத்து நான்கு கேட்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றாலும், அந்த சங்கதி தெரிந்துகொண்டு நான் பொய்யாக சாட்சியம்அளிக்கின்றேன் என்றாலும்சரியல்ல. பிரதிவாதிகள் பதில் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்குதெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் தாவா சொத்தினை எந்த காலத்திலும் யாருக்கும் கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றும், பொது அதிகாரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் சொல்லி உள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்குதெரியவில்லை. (குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)